# இயல் 6.4 - வடிவியல்

## பயிற்சி எண் :: 6.4.2.6.C

### கோணங்கள் - பயிற்சி

**இரண்டு கோணங்கள் மிகை நிரப்புக் கோணங்கள் ஆகும். அவற்றுள் ஒரு கோணம் மற்றொன்றை விட 20° அதிகம் எனில் அவ்விரு கோணங்களின் மதிப்பை கண்டுபிடிக்க**

நாம் கண்டுபிடிக்க வேண்டிய கோணங்களின் மாறிகள் $\Rightarrow x$ மற்றும் $y$

கேட்கப்பட்டுள்ள இரு கோணங்களும் மிகை நிரப்புக் கோணங்கள். எனவே; $\Rightarrow x + y = 180$

மேலும், அவற்றுள் ஒன்று மற்றொன்றைவிட 20° அதிகம். $\Rightarrow y = x + 20$

மாறி $y$-யின் மதிப்பை முதல் சமன்பாட்டில் மாற்றீடு செய்யும்பொழுது; $\Rightarrow x + \overbrace{(x + 20)}^{y} = 180$

$$\Rightarrow 2x + 20 = 180$$

$$\Rightarrow 2x = 180 - 20$$

$$\Rightarrow 2x = 160$$

$$\Rightarrow x = \frac{160}{2} = 80$$

மாறி $x$-யின் மதிப்பை இரண்டாம் சமன்பாட்டில் மாற்றீடு செய்யும்பொழுது; $\Rightarrow y = 80 + 20 = 100$

---

**கேட்கப்பட்டுள்ள கோணங்களின் மதிப்பு 80° மற்றும் 100° ஆகும்.**

Sum & solution prepared on Wednesday 21st July, 2021 :: 18:00 Hrs.
All rights related to content above such as creation of the problem, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.